Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO. 364/2022
DEPOSITION OF DEFENCE SIDE EVIDENCE No. 2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்பு | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | நாராயணன் | தொழில் | நகை கடையில் கணக்காளராக உள்ளேன். |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 16 day of April 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரிஆஜர் )**

1) நான் பைனான்ஸ் நடத்திக்கொண்டே நகை கடையில் கணக்கு வழக்கு பாரத்து வருகிறேன். வழக்கு புகார்தாரர் மற்றும் எதிரியை எனக்கு தெரியும். வழக்கின் சாட்சி எ.ம.சா.1 நாகராஜ் என்பவரை எனக்கு தெரியும். 5, 6 வருடங்களுக்கு முன்பு நான், இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரி மற்றும் எ.ம.சா.1 நாகராஜ் ஆகியோர் ஒன்றாக பைனான்ஸ் நடத்தி வந்தோம். அந்த வகையில் அவர்கள் எனக்கு பழக்கம். நாங்கள் அனைவரும் லட்சுமி சரஸ்வதி என்ற பைனான்ஸில் பார்ட்னர்களாக இருந்தோம். எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் தான் லட்சுமி சரஸ்வதி பைனான்சை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததற்காக வழங்கப்பட்ட சான்றாவணம் ஆகும். லட்சுமி சரஸ்வதி பைனான்ஸ்லில் நான் உட்பட 9 நபர்கள் பார்ட்னர்களாக இருந்தோம். திருப்பத்தூர் சிவராஜ் லாட்ஜ் அருகே மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தின் அலுவலகம் இருந்தது.

2) லட்சுமி சரஸ்வதி பைனான்ஸ் சம்பந்தமான கணக்கு வழக்குகளை ஒவ்வொரு வருடம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கணக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பைனான்ஸ்னை ஒவ்வொரு பங்குதாரரும் கொடுத்த பணத்தை முதலீடாக

வைத்துதான் அந்த பைனான்ஸ் நிறுவனம் நடத்தப்பட்டது. அந்த பைனான்ஸ்யை நிறுவுவதற்காக ஒவ்வொரு பங்குதாரரும் தலா 6 காசோலைகள் வழங்கியுள்ளோம். அந்த பைனான்ஸ் தற்போது நடைபெறவில்லை. அந்த பைனான்ஸ்னின் பங்குதாரர்களான சண்முகம், ஜீவானந்தம், வாசு மற்றும் எதிரி சத்தியநாதனுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டது. அந்த பிரச்சனையின் காரணமாக தான் இந்த வழக்கு தற்போது நடந்து வருகிறது என்றால் சரிதான்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் ஆஜர். புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர். ஆஜர் புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.